
# திராவிடத்தால் வாழ்கிறோம்

863

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

ர.பிரகாசு

124

# இ-வாடகை: செயலி வழியாக விவசாயக் கருவிகள்!



`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

உலகெங்கும் பெரும்பாலான மக்கள் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளை நோக்கி வேகமாக நகர்ந்து வருகின்றனர். இதனால் விவசாயத் துறைக்கான கூலிப் பணியாளர்களின் எண்ணிக்கை வேகமாக சரிந்து வருகிறது. இதனைச் சரிக்கட்டவும் உணவு உற்பத்தியைச் சீராக வைத்திருக்கவும் அறிவியலின் துணை கொண்டு, இயந்திரங்களைப் புகுத்தி வருகிறது, தமிழ்நாடு அரசின் வேளாண்துறை. விதை நடுவது, தண்ணீர் பாய்ச்சுவது, களை பிடுங்குவது, அறுவடைப் பணியில் ஈடுபடுவது என எல்லாவற்றுக்குமே இன்றைய நவீன உலகில் இயந்திரங்கள் வந்துவிட்டன.

இந்தியாவைப் பொறுத்தவரையில், இன்னமும் சரிபாதி மக்கள் விவசாயம் சார்ந்த தொழில்களிலேயே ஈடுபட்டு வருகின்றனர். எனினும், இந்தியாவுக்குப் பலவிதங்களில் முன்னோடியாக இருக்கும் தமிழ்நாடு, வேளாண் துறையிலும் முன்னோடியாகத் திகழ்கிறது. காரணம், இந்தியாவில் உயர்கல்வியில் உயர்ந்த மாநிலம் தமிழ்நாடு. சிறு குறு நடுத்தர நிறுவனங்களை அதிகம் கொண்ட மாநிலம் தமிழ்நாடு. வேகமாக நகரமயமாகி வரும் மாநிலம் தமிழ்நாடு. தமிழ்நாட்டின் சரிபாதி பேர் நகரங்களில்தான் வாழ்கின்றனர்.

இதனால் வேளாண் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை, இந்தியாவின் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் வேகமாகக் குறைந்து வருகிறது. இருந்தபோதிலும், வேளாண் உற்பத்தியில் தமிழ்நாடு சரிவைக் காணவில்லை. அதற்குக் காரணம், உலக நாடுகளுடன் போட்டி போட்டு தமிழ்நாடும் வேளாண் துறையை நவீனமாக்கி வருகிறது. எனினும், பெரு விவசாயிகளால் எளிதாக இந்த நவீனக் கருவிகளை வாங்கிப் பயன்படுத்த முடிவதைப் போல, ஏழை- எளிய விவசாயிகளால் வாங்க இயலாது. அத்தகைய ஏழை- எளிய விவசாயிகளும் நவீனக் கருவிகளைப் பயன்படுத்தத் துணை நிற்கும் விதமாக 'திராவிட மாடல் அரசு' உருவாக்கிய திட்டமே 'இ-வாடகை'.

### 'இ-வாடகை' திட்டம் தொடக்கம்!

வேளாண் பெருமக்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தி வருகிறது, நமது 'திராவிட மாடல் அரசு'. அந்த வகையில், வேளாண் துறையில் தற்போதுள்ள வேலையாட்கள் பற்றாக்குறையைச் சமாளித்து, வேளாண் பணிகளை, குறித்த காலத்தில் செய்து முடிப்பதற்காக குறைந்த வாடகைக்கு, வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான் 'இ-வாடகை' செயலித் திட்டம். உழவன் செயலியில் 'இ-வாடகை' திட்டம் இணைக்கப்பட்டுள்ளது.

### வாடகைக்கு விடப்படும் இயந்திரங்கள்!

புல்டோசர், மண் அள்ளும் இயந்திரங்கள், டிராக்டர், மினி டிராக்டர், சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம், நெல் அறுவடை இயந்திரங்கள், கரும்பு அறுவடை இயந்திரம், இன்பில்டர்கள், தேங்காய் பறிக்கும் இயந்திரம், சிறு பாசனத் திட்டக் கருவிகள், சுழல் விசைத் துளைக் கருவிகள், சிறு விசைத்துளைக் கருவிகள், பாறை வெடிக் கருவிகள், நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள், மின்னியல் ஆய்வுக் கருவிகள், பெர்குஷன் துளைக் கருவிகள்.

இந்த இ-வாடகை செயலியை தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 08.01.2022 அன்று தொடங்கி வைத்தார். விவசாயிகள் தங்களுக்குத் தேவையான இயந்திரங்களை வீட்டில் இருந்தபடியே, இந்த உழவன் செயலியில் முன் பணம் செலுத்தி, முன்பதிவு செய்து பெற்று பயன்படுத்தலாம். டிராக்டர், மினி டிராக்டர் போன்ற இயந்திரங்கள் குறைந்தது 2 மணி நேரமும் அதிகபட்சமாக 20 மணி நேரமும் வாடகைக்கு விடப்படுகிறது. நெல் அறுவடை இயந்திரத்தைக் குறைந்தது ஒரு மணி நேரமும் அதிகபட்சமாக 20 மணிநேரமும் முன்பணம் செலுத்தி வாடகைக்குப் பெறலாம்.



> வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான் 'இ-வாடகை' செயலித் திட்டம்.

### ஏற்றம் பெறும் ஏழை விவசாயிகள்!



முன்பதிவு விவரத்தினை சரிபார்த்த பின்னர், நெட் பேங்கிங், கிரெடிட் கார்டு மூலம் வாடகை கட்டணத்தை அதிலேயே செலுத்த வேண்டும். பிறகு, முன்பதிவிற்கான ஒப்புகைச் சீட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பயனாளிகள் தேர்வு செய்த நாளில், தேர்வு செய்த பணியிடத்திற்கு இயந்திரம் அனுப்பப்பட்டு விடும்.

இ-வாடகை செயலி மூலம், வேளாண் பொறியியல் துறை அலுவலர்களை விவசாயிகள் நேரடியாக தொடர்புகொண்டு, புதிய திட்டங்கள், விண்ணப்பிக்கும் முறை, பயனாளிகளின் தகுதி உள்ளிட்டவற்றை அறிந்து கொள்ள முடியும்.

### வாடகை எவ்வளவு?

டிராக்டரால் இயக்கக்கூடிய அனைத்துக் கருவிகளுக்கும் டிராக்டருடன் ஒரு மணி நேரத்திற்குக் குறைந்த வாடகையாக ரூ.500, சக்கர வகை நெல் அறுவடை இயந்திரத்திற்கு ஒரு மணிநேரத்திற்கு ரூ.1160, டிராக்டர் வகை நெல் அறுவடை இயந்திரத்திற்கு ஒரு மணிநேரத்திற்கு ரூ.1880 என்ற அடிப்படையில் குறைந்த வாடகை அடிப்படையில் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதுபோல அனைத்து கருவிகளுக்கும் தனியாரைக் காட்டிலும் மிகக் குறைவாக வாடகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் இயந்திரங்களை குறைந்தது 36 மணி நேரத்திற்கு முன்னதாகவும் அதிகபட்சமாக 15 நாட்களுக்குள்ளும் முன்பதிவு செய்ய வேண்டும். முன்பணமாக செலுத்திய வாடகையினை ரத்து செய்ய விரும்பினால், முன் பதிவு செய்த 24 மணி நேரத்திற்குள் ரத்து செய்து கொள்ள வேண்டும். மேலும் பயன்படுத்தப்படாத வாடகைத் தொகையினை பெற்றிட சம்பந்தப்பட்ட உபகோட்ட அலுவலகத்தினைத் தொடர்பு கொள்ளலாம்.

### அமோக வரவேற்பு!

தொடங்கப்பட்ட நாளில் இருந்தே ஏழை-எளிய விவசாயிகள் மத்தியில் இ-வாடகை நடைமுறைக்கு மிகப்பெரிய வரவேற்பு உருவாகியுள்ளது. திட்டம் அறிமுகமான காலகட்டத்தில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 2,500 பேர் இத்திட்டத்தைப் பயன்படுத்திய நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை 5,000-ஐக் கடந்துள்ளது. இரண்டே ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை இரட்டிப்பாகி இருப்பதே இத்திட்டத்தின் தேவையை, விவசாயிகளிடம் கிடைத்திருக்கும் வரவேற்பை உணர்த்துகிறது.

...சாதனை தொடரும்

## செம்மொழித் தமிழுக்குப் புகழ் சேர்க்கும் கழகம்!



முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை, செம்மொழி நாளாக அறிவித்ததுடன், கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழாவில் அரசின் நான்காண்டு சாதனை மலரையும் வெளியிட்டார் நம் முதலமைச்சர். கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செம்மொழிக் கண்காட்சியினையும் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

தமிழ்மொழி உருவாக்கம், தொல்லியல் சான்றுகள், செம்மொழித் தகுதி, 1815-ஆம் ஆண்டு முதல் 1950-ஆம் ஆண்டு வரையில் வெளிவந்த செவ்வியல் நூல்கள், 2021-ஆம் ஆண்டு முதல் 2025-ஆம் ஆண்டு வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை ஆகியவற்றால் வெளியிடப்பட்ட நூல்கள், தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் உருவாக்கப்பட்ட கலைஞர் கருவூலம் மற்றும் ஒளிப்படங்கள் ஆகியவை கொண்ட அந்தக் கண்காட்சியை பள்ளிக் கல்லூரி மாணவர்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்தக் கண்காட்சிக்குக் கிடைத்த வரவேற்பு காரணமாக, ஒருவார காலத்துக்கு நீட்டிக்கப்பட்ட நிலையில், இன்று வரை (09.06.2025) கண்காட்சி நடைபெற உள்ளது. தமிழ்வளர்ச்சித் துறை ஏற்பாடு செய்த இந்தச் செம்மொழிக் கண்காட்சியினைக் கட்டணமில்லாமல் பார்வையிடலாம் என்பதால், தமிழறிஞர்கள் பொதுமக்கள் மத்தியில் கவனம் பெற்றது. கலைஞரால் செம்மொழி மதிப்பு பெற்ற தமிழுக்கு, கழகம் புகழ் சேர்க்கிறது.

## ப்ளாஷ்பேக்



### என் தந்தை பணியாற்றிய பள்ளியில் பாசறைக் கூட்டம்!



அப்துல் ரகுமான் பாரி

1998-ஆம் ஆண்டு, ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்டத்தின், தி.மு.க. இளைஞர் அணி பாசறைக் கூட்டம் மறைந்த அண்ணன் ரூசோ அவர்களின் ஏற்பாட்டில் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகில் உள்ள அமராவதி புதூர் குருகுல உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. அன்றைய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் தா.கிருஷ்ணன் அவர்கள் தலைமை வகிக்க, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். அந்தப் பள்ளியில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றிய என் தந்தை, மத நல்லிணக்க புலவர் அப்துல் ரகுமான் அவர்கள் வரவேற்பு வழங்கினார். இந்த நிகழ்வு அந்த பள்ளியில் நடைபெறுவதற்கு தாளாளரிடம் பேசி ஏற்பாடு செய்ததால், நன்றியுரையில் என் தந்தை பெயரை கழக நிர்வாகிகள் மறக்காமல் குறிப்பிட்டனர். அவர் வழியில் நானும் கழகப் பணியைத் தொடர்கிறேன்.

– அப்துல் ரகுமான் பாரி,
தி.மு.க. தலைமைக்கழகப் பேச்சாளர், ஒசூர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நல்வருக

### முதல் தேர்தல் வெற்றி!

மத்திய, மாகாண சட்டமன்றங்களுக்கான தேர்தல் 1920-ஆம் ஆண்டு நவம்பர் 30-ஆம் தேதி நடைபெற்றது. காங்கிரஸ் கட்சி, தேர்தலில் நேரடியாகப் போட்டியிடவில்லை. இருப்பினும், நீதிக்கட்சிக்கு எதிராக பிரச்சாரத்தில் ஈடுபட்டது. தேர்தலில், 'ஹோம்ரூல்' இயக்கத்துக்கு காங்கிரஸ் கட்சி மறைமுக ஆதரவளித்தது. டிசம்பர் 6-ஆம் தேதி வெளியிடப்பட்ட தேர்தல் முடிவில், நீதிக்கட்சி மகத்தான வெற்றி பெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131